Ph: 04175- 236654 I 235295

# SHANMUGA INDUSTRIES
## ARTS AND SCIENCE COLLEGE

Certified under section2(f) of UGC Act -(An ISO 9001 : 2008 Certified Institution)

Permanently Affiliated to Thiruvalluvar University, Vellore and approved by the Govt.of .Tamilnadu & AICTE
manalurpettai Road ,Tiruvannamalai - 606 603.

21.06.2017

### சண்முகா கல்லூரியில் சர்வதேச யோகா தின விழா

திருவண்ணாமலை சாய் சேவா யோகா, இயற்கை மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி மையத்துடன் திருவண்ணாமலை சண்முகா தொழிற்சாலை கலை அறிவியல் கல்லூரி இணைந்து சர்வதேச யோகா தினம் கொண்டாடப்பட்டது. இந்நிகழ்ச்சியில் கல்லூரியின் செயலர் மற்றும் தாளாளர் **என். குமார்** தலைமையேற்றும் இணைச்செயலர் **டி.ஏ.எஸ். முத்து** வாழ்த்துரை வழங்கியும் தொடங்கிவைத்தனர். கல்லூரியின் தலைவர் **எம்.என். பழனி**, பொருளாளர் **கோ. இராஜேந்திரகுமார்**, **அறக்கட்டளை உறுப்பினர்கள்** வாழ்த்துதலோடு நடைபெற்ற இந்நிகழ்ச்சிக்குக் கல்லூரியின் முதல்வர் முனைவர் **கே. ஆனந்தராஜ்** வரவேற்புரையாற்றினார். கல்விப்புல முதன்மையர் **பேரா. அழ. உடையப்பன்** நன்றியுரையாற்றினார். நிகழ்ச்சியைத் தமிழ்ப் பேராசிரியர் **இரா. சங்கர்** தொகுத்து வழங்கினார். நாட்டுநலப் பணித்திட்ட ஒருங்கிணைப்போடு நடைபெற்ற இந்நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டினைத் திட்ட அலுவலர்கள் பேராசிரியர் **த. அருண்குமார்** மற்றும் பேராசிரியர் **எம். பன்னீர்செல்வன்** ஆகியோர் செய்திருந்தனர்.

இந்நிகழ்ச்சியில் திருவண்ணாமலை சாய் சேவா யோகா, இயற்கை மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி மையம் சார்பில் மருத்துவர் ப. **எழில்மாறன்** கலந்து கொண்டு மாணவர்களுக்கு மூச்சுப் பயிற்சியையும், உடல் ஆரோக்கியத்திற்குத் தேவையான வழிகாட்டுதல்களையும் வழங்கினார். நிகழ்ச்சியின் நிறைவில் யோகாவின் அவசியத்தை வலியுறுத்தும் வகையில் சுவரொட்டியினையும், விளம்பரத் துண்டறிக்கையினையும் மருத்துவர் ப. **எழில்மாறன்** வெளியிட அதனைக் கல்லூரியின் செயலர் மற்றும் தாளாளர் **என். குமார்** பெற்றுக்கொண்டார். இவ்விழாவில் ஒருங்கிணைப்பாளர் **சாய் பிரசாத்**, மருத்துவ அலுவலர்கள் **பாரதி கண்ணம்மாள்**, **பிரியா** மற்றும் குழுவினர் உடல், மனநலம் தொடர்பான ஆலோசனைகளை வழங்கிப் பயிற்சி அளித்தனர்.

N.K

செயலர் & தாளாளர்


SHANMUGA INDUSTRIES ARTS & SCIENCE COLLEGE


SHANMUGA INDUSTRIES ARTS & SCIENCE COLLEGE